# விதாதா காளான் விதை ஆய்வுகூடம்

கேகாலை மாவட்டத்தில் உள்ள காளான் விவசாயிகளுக்கு பிரச்சினைாக இருந்த உயர்தர காளான் விதைகள் இல்லாமை காரணமாக அவர்களின் வருமான நிலை மிகவும் கீழ் மட்டத்தில் இருந்ததோடு சில வியாபாரங்களை இடைநடுவில் நிறுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக மாவனெல்ல விதாதா நிலையத்தில் காளான் விதை ஆய்வுகூடமொன்றை ஸ்தாபித்து அந்த விதை ஆய்வுகூடத்தில் விளைச்சல் அதிகமுள்ள காளான் இனங்கள் தொடர்பாக ஆய்வு நடத்தி அத்தகைய பரிசுத்தமாக வளர்க்கப்பட்ட விதைகளை ஆய்வு கூடத்தில் வளர்த்து மிக உயர்ந்த தரத்திலான தாய் விதைகளை உற்பத்திசெய்து அதனூடாக முளைக்கும் பரம்பரையின் காளான் விதைகளை வழங்குவதன் மூலம் கேகாலை மாவட்டத்தில் உள்ள காளான் விவசாயிகளுக்கு மிக உயர்ந்த வருமானம் கிடைத்துக்கொண்டிருக்கின்ற அதேவேளையில் புதிதாக தொழில் இன்றி இருந்த பெரும் எண்ணிக்கையிலான பெண்மணிகள் அவர்களுடைய சுயதொழிலாக காளான் வியாபாரத்தை ஆரம்பித்து அவர்களுடைய மனை பொருளாதாரத்தையும் சமூக நிலையையும் உயர்த்திக்கொண்டுள்ளனர்.

இந்த கருத்திட்டத்தை இத்துடன் நிறுத்திவிடாமல் எதிர்வரும் நாட்களில் Tissue Culture ஆய்வுகூடம் வரை முன்னேற்றுவதற்கு உரிய கருத்திட்ட திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2019ஆம் ஆண்டின் முன்னேற்றம்

விற்பனைசெய்த பைக்கட் அளவு - 2265

கிடைத்த வருமானம் - ரூ. 198,210.00

செலவு - ரூ. 156,406.00

நிகர இலாபம் - ரூ. 41,804.00

காளான் பயனாளிகள் எண்ணிக்கை - 54

உற்பத்திசெய்யப்படுகின்ற காளான் விதை வகைகள் - Normal Oyster, Butan Oyster, Abalony

விதை பைக்கட்களின் விலை -

| வகை | அளவு | விலை | |
|---|---|---|---|
| Normal Oyster பைக்கட் | 01 | ரூ. 80.00 | விதாதா ஒன்றியத்தின் அங்கத்தினர்களுக்காக |
| Butan Oyster பைக்கட் | 01 | ரூ. 80.00 | |
| Abalony பைக்கட் | 01 | ரூ. 90.00 | |
| Normal Oyster பைக்கட் | 01 | ரூ. 100.00 | ஒன்றியத்தில் அங்கத்துவம் பெறாமல் வெளியிலிருந்து வருகின்றவர்களுக்கு |
| Butan Oyster பைக்கட் | 01 | ரூ. 100.00 | |
| Abalony பைக்கட் | 01 | ரூ. 120.00 | |